1978 மார்ச் 9]

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இதிலுள்ள மானேஜ்மென்டார் நினைத்தால் எந்த நேரத்திலும் இவர்களை வீட்டுக்கு அனுப்பிவிடக்கூடிய வசதி இருக்கிறது. ஆகவே இவர்களை நிரந்தரமாக்குவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதற்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களால் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள், தர்மபுரி மாவட்டத்தில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எப்போது நிரந்தரமாக்கப்படுவார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை. இருந்தாலும் எல்லா பட்டதாரிகளும் நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்கிற அடிப்படையில் தான் நான் பதில் தந்திருக்கின்றேன். எல்லோரையும் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

Polytechnic in Dharmapuri district.

*471 Q. Dr. K. SAMARASAM, Thiru M. ANNAMALAI ; Will the Hon. the Minister for Education be pleased to state whether the feasibility of starting a new Polytechnic in Dharmapuri district has been examined ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; ஆம். தர்மபுரி மாவட்டத்தில் பாலிடெக்னிக் ஒன்றினைத் துவக்குவதற்கான ஒரு கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

[முற்பகல் 9.50.]

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் பல்தொழில் பயிற்சிக் கல்லூரி தொடங்க வேண்டுமென்பது நீண்ட நாட்களாக கோரிக்கை. இதுபற்றி அண்மையில் பரிசீலிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. அது எப்போது நிறைவேற்றப்படும் ? அதற்கான முயற்சியில் அரசு எந்த அளவிற்கு ஈடுபட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, பரிசீலனை முடிந்தவுடன், அதுபற்றி மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் ஒரு வறட்சி மாவட்டம், மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இங்கு ஒரு தொழிற் கல்லூரி அமைப்பது சம்பந்தமாக ஆலோசனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எங்கு, எப்போது அமைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதற்கு என அமைக்கப்பட்ட ஒரு ஆலோசனைக் குழு இந்த பாலிடெக்னிக்கை அமைப்பதற்கான இடங்களாக ஓசூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி ஆகிய இடங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே ஸ்டேட் இண்டஸ்ட்ரியல் புரோமோஷன் கார்ப்பரேஷன், தமிழ்நாடு அவர்கள் ஓசூரில் நிறுவுவது நலமென்று பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

தமிழக நூலகங்களிலிருந்து அகற்றப்பட்ட புத்தகம்

* 472 வினா—திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தமிழகத்தின் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எழுதிய 'நெஞ்சுக்கு நீதி' என்ற நூல் அவசரநிலை அமுலில் இருந்த காலத்தில் நூலகங்களிலிருந்து அகற்றப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அதனை நூலகங்களில் இடம் பெறச் செய்ய இந்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய நூலகங்களாக இருக்கின்ற டிஸ்ட்ரிக்ட் லைப்ரரி பிரான்சுகளிலும், மாநகராட்சி நூலகங்களிலும் இந்த நூல் கிடைக்கப் பெறுவதில்லை என்று சொல்லப்படுகிறது. இந்த இடங்களில் எல்லாம் இந்த நூல் கிடைக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அப்படி ஒரு யோசனை இல்லை.